මුදල්, ආර්ථික සහ ප්‍රතිපත්ති සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, ECONOMY AND POLICY DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01, இலங்கை.
The Secretariat, Colombo 01, Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 2484500, 011 2484600, 011 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2449823
වෙබ් අඩවිය / இணைய தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல / My No: BD/CBP/01/01/03 -2019
ඔබේ අංකය / உமது இல / Your No:
දිනය / திகதி / Date: 2019.12.18

**வரவு செலவுத்திட்ட சுற்றுநிருப இல. 08/2019**

அமைச்சுக்களின் செயலாளர்கள்
மாகாண சபைகளின் பிரதான செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள் அனைவருக்கும்

**2019 ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களை தயாரித்தல்**

**1. பின்னணி:**

2019 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட அமைச்சுக்களின் வகுதிகள் 2019.12.10 ஆந் திகதிய 2153/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் குறிப்பிடத்தக்களவு மாற்றியமைக்கப்பட்டது. இதற்கமைவாக குறித்த வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 31 அமைச்சரவை அந்தஸ்த்துள்ள மற்றும் 06 அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சுக்களின் கீழ் கட்டமைக்கப்பட்டிருந்த விடயதானங்கள், பணிகள், திணைக்களங்கள் மற்றும் பொது நிறுவனங்கள் என்பன 29 அமைச்சுக்களின் கீழ் மீள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த திருத்தத்தினைத் தொடர்ந்து 2019 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் கீழ் தொடர்ந்து காணப்படுகின்ற சில செலவினத் தலைப்புகள் முழுமையாக இல்லாதாக்கப்பட்டதுடன் அவற்றுடன் தொடர்புடைய தொழிற்பாடுகள் ஏனையதொரு அல்லது பல செலவினத் தலைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக சில செலவினத் தலைப்புகளின் தொழிற்பாட்டுக் கூறுகள் ஏனைய சில செலவினத் தலைப்புகளுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அதேவேளை, புதிய தொழிற்பாட்டுக் கூறுகள் சிலவும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன.

மேற்குறித்த மாற்றங்களுக்கமைவாக, 2019 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தினை திருத்துவதற்கு இவ்வருடத்தில் போதிய கால அவகாசம் இருக்கவில்லை. எனவே, 2019 ஆம் ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்கள் 2019 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட செலவினத் தலைப்புகளுக்கு அமைவாக தயாரிக்கப்படுதல் வேண்டும்.

இச்சுற்றுநிருபத்தினை வெளியிடுகின்ற நோக்கம் மேற்குறித்த பின்னணியில் நிதி அறிக்கைகளை தயாரிப்பதில் பின்பற்றவேண்டிய நடைமுறைகளை விலக்குவதற்காகும்.

## 2. நிதிக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கான பொறுப்பு

### 2.1 அமைச்சுக்கள்

2019 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்திற்கு அமைவாக புதிய அமைச்சுக்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட செலவினத் தலைப்புகளின் விபரமானது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது. 2019 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளுக்கமைவாக ஒப்படைக்கப்பட்டுள்ள செலவினத் தலைப்புகளுடன் தொடர்பான விடயங்களைக் கருத்திற்கொண்டு 2019 இற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் சமர்ப்பிப்பதற்கான பொறுப்பு பின்வரும் அடிப்படையில் பொதுத்திறைசேரியினால் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக அட்டவணையின் (2) ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட 2019 இல் முன்னைய அமைச்சுக்கள் தொடர்பாக 2019 ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்பித்தல் ஆகிய பொறுப்புகள் (1) ஆம் நிரலில் குறிப்பிடப்பட்ட புதிய அமைச்சுக்களின் செயலாளர்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இச் சுற்றுநிருபம் மற்றும் 2019.12.03 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றுநிருபம் என்பவற்றின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி முன்னைய செலவினத் தலைப்புகளுக்கான வருடாந்த நிதி அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் அவற்றினை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதற்காக அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிப்பது குறித்த விடயங்கள் ஒப்படைக்கப்பட்ட முன்னைய அமைச்சுக்களின் பிரதான நிதி அலுவலர் /பிரதான கணக்காளரின் பொறுப்பாகும்.

### 2.2 திணைக்களங்கள்

திணைக்களமொன்று ஒப்படைக்கப்பட்டுள்ள அமைச்சு மாற்றப்பட்டபோதும், குறித்த திணைக்களத்தின் கணக்கீட்டுப் பணிகள் அத்திணைக்களத்தின் செலவினத் தலைப்பு மற்றும் பணிகள் மாற்றமடையாமல் தொடர்ந்திருக்கின்றன என்ற வகையில் செலவினத் தலைப்பிற்கமைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறாயினும் குறித்த திணைக்களத்தின் பிரதான கணக்கீட்டு அலுவலர் புதிய அமைச்சின் செயலாளராக இருப்பார்.

### 2.3 முற்பணக் கணக்குகள்

2019 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட முற்பணக் கணக்குகளின் புதிய அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடு, அட்டவணையின் (3) ஆம் நிரலில் விளக்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2019 இன் இணக்கக் கூற்றுக்களினை தயாரித்தல் முன்னைய அமைச்சின் பிரதான கணக்கீட்டு அலுவலர் / பிரதான கணக்காளரின் பொறுப்பாகும். இக்கூற்றுக்களை கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பித்தல் புதிய அமைச்சுக்களின் பிரதான கணக்கீட்டு அலுவலர்கள் மற்றும் பிரதான நிதி அலுவலர்களின் பொறுப்பாகும்.

இவ்விடயம் தொடர்பாக உங்களின் ஒத்துழைப்பு பெரிதும் எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒப்பம்: எஸ்.ஆர். ஆட்டிகல
திறைசேரியின் செயலாளர்

பிரதிகள்:

1. அதிமேதகு சனாதிபதியின் செயலாளர்
2. பிரதம மந்திரியின் செயலாளர்

அட்டவணை

| 2019.12.10 ஆந் திகதிய 2153/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக புதிய அமைச்சுக்களின் பெயர்<br>(1) | 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஒப்படைக்கப்பட்ட செலவினத் தலைப்புகள் (2019 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்)<br>(2) | முற்பணக் கணக்கு விடய இல.<br>(3) |
|---|---|---|
| புத்தசாசன கலாசார மற்றும் சமய அலுவல்கள் அமைச்சு | 101 புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சு | 10101 |
| நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு | 102 நிதி அமைச்சு | 10201 |
| | 104 தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள் மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, வடமாகாண அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி, இளைஞர் அலுவல்கள் அமைச்சு | 10401 |
| | 53 பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சு | 05301 |
| | 56 விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சு | 05601 |
| பாதுகாப்பு அமைச்சு | 103 பாதுகாப்பு அமைச்சு | 10301 |
| நீதி, மனித உரிமைகள் மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சு | 110 நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 11001 |
| | 157 தேசிய ஒருங்கிணைப்பு, அரச கரும மொழிகள், சமூக முன்னேற்றம் மற்றும் இந்து சமய அலுவல்கள் அமைச்சு | 15701 |
| சுகாதாரப் பராமரிப்பு மற்றும் சுதேச மருத்துவ சேவைகள் அமைச்சு | 111 சுகாதாரம், போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு | 11101 |
| வெளிநாட்டு உறவுகள் அமைச்சு | 112 வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 11201 |
| போக்குவரத்து சேவைகள் முகாமைத்துவ அமைச்சு | 114 போக்குவரத்து மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 11401 |
| பாதைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 117 நெடுஞ்சாலைகள் வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு | 11701 |
| மகாவலி, விவசாய, நீர்ப்பாசன மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு | 118 கமத்தொழில், கிராமிய பொருளாதார அலுவல்கள், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசன மற்றும் கடற்றொழில் நீரியல் வள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சு | 11801 |
| மின்வலு சக்தி அமைச்சு | 119 மின்வலு, சக்தி மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சு | 11901 |
| மகளிர், சிறுவர் அலுவலர்கள் மற்றும் சமூக பாதுகாப்பு அமைச்சு | 120 மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சு | 12001 |
| | 124 ஆரம்பக் கைத்தொழில்கள் மற்றும் சமூக மேம்பாட்டு அமைச்சு | 12401 |
| காணி, காணி அபிவிருத்தி அமைச்சு | 122 காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு | 12201 |
| கல்வி அமைச்சு | 126 கல்வி அமைச்சு | 12601 |
| பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு | 130 பொதுநிர்வாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 13001 |
| | 155 உள்ளக மற்றும் உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு | 15501 |
| பெருந்தோட்டக் கைத்தொழில்கள் மற்றும் ஏற்றுமதிகள் விவசாய அமைச்சு | 135 பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சு | 13501 |
| சமுதாய வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு | 140 மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு மற்றும் சமுதாய அபிவிருத்தி அமைச்சு | 14001 |
| கைத்தொழில்கள் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவ அமைச்சு | 149 கைத்தொழில், வாணிப நீண்டகால இடம்பெயர்ந்தோர் மீள் குடியேற்றம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு | 14901 |
| சிறிய மற்றும் நடுத்தர வியாபார தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு | 158 பொது தொழில் முயற்சி, கண்டிய மரபுரிமைகள், கண்டி அபிவிருத்தி அமைச்சு | 15801 |
| சுற்றுலா மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு | 159 சுற்றுலா அபிவிருத்தி வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவலர்கள் அமைச்சு | 15901 |
| சுற்றாடல் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 160 மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு | 16001 |
| நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு | 162 மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சு | 16201 |
| | 123 வீடமைப்பு நிர்மாணம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 12301 |

| 2019.12.10 ஆந் திகதிய 2153/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாக புதிய அமைச்சுக்களின் பெயர் | 2019 ஆம் ஆண்டுக்கான வருடாந்த நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதற்கு ஒப்படைக்கப்பட்ட செலவினத் தலைப்புகள் (2019 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம்) | முற்பணக் கணக்கு விடய இல. |
|---|---|---|
| உயர்கல்வி, தொழில்நுட்ப மற்றும் புத்தாக்கங்கள் அமைச்சு | 166 நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சு<br>52 விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சி அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சு | 16601<br>05201 |
| துறைமுகங்கள் மற்றும் கப்பற்றொழில் அமைச்சு | 176 துறைமுகங்கள், கப்பற்றொழில் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு | 17601 |
| விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு | 194 தொலைத்தொடர்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு | 19401 |
| கைத்தொழில் ஏற்றுமதி மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு | 195 அபிவிருத்தி உபாயங்கள் மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 19501 |
| தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அமைச்சு | 108 தபால் சேவைகள், முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு<br>51 டிஜிற்றல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சு<br>55 ஊடக அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சு | 10801<br>05101<br>05501 |
| திறன் அபிவிருத்தி, வேலைவாய்ப்பு மற்றும் தொழில்உறவுகள் அமைச்சு | 54 தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அந்தஸ்த்தற்ற அமைச்சு | 05401 |